யா/தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை

தாவடி, கொக்குவில்

# பரிசளிப்பு விழா : 2012

# PRIZE GIVING – 2012

## Principal's Report

## அதிபர் அறிக்கை
## 2012

2012.11.24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை
தாவடி, கொக்குவில்

# J/THAVADY HINDU TAMIL MIXED SCHOOL, THAVADY, KOKUVIL

பரிசளிப்பு விழா : 2012

## PRIZE GIVING – 2012

அதிபர் அறிக்கை

## PRINCIPAL'S REPORT

2012 ஆம் ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை
தாவடி, கொக்குவில்

மகுட வாசகம்
"உயர் நெறி வழி உய்மின்"

## தூரநோக்கு- VISION

தன்னம்பிக்கையும் தரமான கல்வியும் சனநாயக விழுமிய பற்றுதலும் ஆன்மீக விஞ்ஞான தேடலும் கொண்ட நற்பிரஜைகளை உருவாக்குதல்.

## நோக்கக்கூற்று –MISSION

உடல்உள வளர்ச்சியும் சமூகஉணர்வும் கொண்ட மாணவர்களை வளர்ப்பதன் மூலம் விளைதிறனும் தற்துணிவும் மிளிரும் நாட்டிற்கு இன்று தேவைப்படும் வினைத்திறன் உடைய மாணவர்களை உருவாக்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை

தாவடி கொக்குவில்

பரிசளிப்பு விழாவும் புதிய மைதானத்திறப்புவிழாவும் -2012

காலம்

24.11.2012 சனிக்கிழமை பி.ப 1.00 மணி.

இடம்

பாடசாலை பிரதான மண்டபம்

தலைவர்

திரு.நா.சிவநேசன் (அதிபர்)

ஆசியுரை

சிவஸ்ரீ.ப.சிவசங்கரக்குருக்கள்

(பிரதமகுரு, தாவடி அம்பலவாண வேதவிநாயகர் ஆலயம்)

பிரம்மஸ்ரீ.நா.சசிதரசர்மா

(ஆதீனகர்த்தா,தாவடி வடபத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்)

வாழ்த்துரை

Dr.பொ.இராமநாதன்

(ஓய்வுநிலை சித்தவைத்தியதுறை விரிவுரையாளர்)

உயர்திரு.இ.பரமேஸ்வரலிங்கம்

(உபதவிசாளர்,வலிதெற்கு பிரதேச சபை)

பிரதம விருந்தினர்

பேராசிரியர்.க.தேவராஜா

(முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம், யாழ்.பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்கள்

உயர்திரு.சி.கந்தசாமி

(பிரதிக்கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம், பதிற் கோட்டக் கல்விப் பணிப்பாளர், உடுவிற் கல்விக் கோட்டம்)

உயர்திரு.எஸ்.சிவனேஸ்வரன் (அதிபர்)

(யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி)

உயர்திரு.பொ.ஜெயகரன்

(கிராம அலுவலர், தாவடி கிழக்கு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்திரு.செ.பரமநாதன்

(பொருளாளர், உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்)

உயர்திரு.ந.லோகேஸ்வரன் (பழைய மாணவர் சங்கச்செயலாளர்)

**கௌரவவிருந்தினர்கள்**

செல்வி.ச.தாரணி

செல்வி.அ.சர்மிளா

(ஆசரியர்கள், விநாயகர் முன்பள்ளி, தாவடி)

**பரிசில் வழங்கல்**

திருமதி.லக்ஷ்மிதேவி தேவராஜா


## நிகழ்ச்சி நிரல்

1. மங்கள விளக்கேற்றல்
2. தேவாரம்
3. தமிழ்த்தாய் வாழ்த்து
4. புதிய மைதானத் திறப்புவிழா- பேராசிரியர்.க.தேவராஜா
5. சைக்கிள் தரிப்பிட திறப்பு விழா - உயர்திரு ந.லோகேஸ்வரன் (பழைய மாணவர் சங்க செயலாளர்)
6. வரவேற்புரை :- திருமதி.வ.செல்வரஞ்சன்(உபஅதிபர்) செல்வி.அ.சிந்துஜா (தரம் 10 மாணவி)
7. ஆசியுரை :-
8. தலைமையுரை:- திரு.நா.சிவநேசன் (அதிபர்)
9. வாழ்த்துரை
10. சிறப்பு விருந்தினர் உரை:-
11. பிரதம விருந்தினர் உரை:-
12. பரிசில் வழங்கல்
13. நன்றியுரை:- செல்வி.மா.மகாலட்சுமி. (ஆசிரியர்)
14. கலைநிகழ்வுகள் நெறிப்படுத்தல் - திரு.ச.தயானந்தன்
15. பாடசாலைக் கீதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர்



திரு.நா.சிவநேசன்

B.A.Dip.in.Ed(Merit), M.Ed.SLPS



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உப அதிபர்



**திருமதி. வ. செல்வறஞ்சன்**

(Eng.Trd SLTS2-I)



திருமதி.ச.ஜெயசீலன்
Pri.Trd, S.L.T.S - 2-I



திருமதி.ப.மகேந்திரன்
Maths.Trd.B.A, Dip.in.Ed(Merit), S.L.T.S-I



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பாடசாலையின் ஆளணியினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2011ஆம் ஆண்டுபரிசளிப்பு விழா



2012ஆம் ஆண்டு இல்ல மெய்வல்லுனர் போட்டி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விளையாட்டு மைதானத்துக்காக புதிதாக கொள்வனவு


செய்த காணியின் முகப்புத் தோற்றம் 09.08.2012



ஆசிரியர் தினவிழா – 2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்விச்சுற்றுலா 2012 - புத்தளம் உப்பளம்



கல்விச்சுற்றுலா 2012 – பொலன்னறுவை 2ம் இலக்க சிவாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதிபர் திரு.நா.சிவநேசன் "ஆசிரியர் பிரதீபா பிரபா - 2012"அதியுயர் ஜனாதிபதி விருதை கௌரவ கல்வி அமைச்சரிடமிருந்து பெறுதல்



ஆசிரியை திருமதி.ச.ஜெயசீலன் "ஆசிரியர் பிரதீபா பிரபா - 2012" அதியுயர் ஜனாதிபதி விருதை கௌரவ கல்வி அமைச்சரிடமிருந்து பெறுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை பரிசளிப்பு விழா-2012 அதிபர் அறிக்கை

எல்லாம் வல்ல தாவடி அம்பலவாண வேதவிநாயகர் பாதம் பணிந்து 2012 பரிசளிப்புவிழாவிற்கு பிரதமவிருந்தினராக வருகைதந்திருக்கின்ற எனது பேரன்புக்குரிய பேராசிரியர் க.தேவராஜா அவர்களே அவர்தம் பாரியார் திருமதி.லக்ஷ்மிதேவி தேவராஜா அவர்களே, சிறப்புவிருந்தினராக வருகை தந்திருக்கின்ற அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய வலிகாமம் கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளரும் உடுவிற்கல்விக்கோட்ட பதிற் கோட்டக்கல்விப்பணிப்பாளருமான உயர்திரு.சி.கந்தசாமி அவர்களே ஆசியுரை வழங்க வந்திருக்கின்ற வணக்கத்துக்குரிய சிவஸ்ரீ.ப.சிவசங்கரக்குருக்கள், பிரம்மஸ்ரீ.நா.சசிதரசர்மா அவர்களே வாழ்த்துரை வழங்க வந்திருக்கின்ற எமது பாடசாலையின் புரவலர்களான Dr.பொ.இராமநாதன், திரு.இ.பரமேஸ்வரலிங்கம் அவர்களே, சிறப்புவிருந்தினர்களான எமது பாடசாலையின் மேல் பற்றுக் கொண்ட உயர்திரு.எஸ்.சிவனேஸ்வரன், உயர்திரு.பொ.ஜெயகரன், உயர்திரு.செ.பரமநாதன், உயர்திரு.ந.லோகேஸ்வரன் ,கௌரவவிருந்தினர்களான செல்வி.ச.தாரணி, செல்வி.அ.சர்மிளா அவர்களே எமது பாடசாலையின் அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய உபஅதிபர், ஆசிரியர்களே, கல்விசாரா ஊழியர்களே எனது கருணைக்குரிய மாணவச் செல்வங்களே, உண்மை ஆதரவு தரும் பெற்றோர்களே, பழைய மாணவர்களே, நலன்விரும்பிகளே அனைவருக்கும் இந்நன்னாளிலே முதற்கண் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

எமது பாடசாலை 1875 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 136 வருட காலத்தை நிறைவுசெய்துள்ளது.இக்காலத்தில் கிடைக்கப்பெற்ற வளங்களோடு இயங்கி அரிய சாதனைகள் பலவற்றை நிகழ்த்தி வளர்ச்சி அடைந்துவருகின்றது. எமது பாடசாலை ஆசிரியர்களின் அயராத உழைப்பினாலும் உங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரது ஒத்துழைப்பினாலும் உதவிகளாலும் சிறந்த கற்றல்,இணைபாடவிதானப் பெறுபேறுகளைப் பெற்று வருகின்றது. 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. சா/த. பரீட்சையில் சித்திபெற்று 11 மாணவர்கள் க.பொ.த. உ/தரத்திற்கு தகுதி பெற்று தற்பொழுது க.பொ.த. உயர்தரம் கற்றுவருகின்றார்கள்.

க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் சித்தி பெற்றோர்(2011)

| இல | பெயர் | Results | | | |
|---|---|---|---|---|---|
| 1 | கிருபாகரன் ஜெனார்த்தனன் | 5A | 3B | 1C | - |
| 2 | லஜிதா சூரியகுமார் | 4A | 2B | 2C | 1S |
| 3 | கோஜிகா தயானந்தன் | 2A | 4B | 2C | 1S |
| 4 | சிவகுமார் சுலக்சன் | 2A | 1B | 4C | 2S |
| 5 | திசாளினி சிவகுமார் | 2A | 4B | 1C | - |
| 6 | இரவீந்திரராஜா புவிராஜ் | 2A | - | 5C | 1S |
| 7 | லதுசா உதயகுமார் | 1A | 3B | 2C | 3S |
| 8 | சொபிசா வரதராஜா | 1A | 3B | 2C | 2S |
| 9 | சுரேஸ்குமார் வினோஜன் | 1A | - | 5C | 2S |
| 10 | மனோகரன் கோபிதன் | 1A | - | 3C | 5S |
| 11 | லிங்கராஜா அஜன்ராஜ் | - | 1B | 3C | 3S |

சித்தியடைந்த இம் மாணவர்களுக்கு எனது நல்வாழ்த்துக்கள்.

2012 இல் நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 33% மான மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர் 100 புள்ளிகளுக்கு மேல் 22%மான மாணவர்கள் பெற்றுள்ளனர். இதனால் வலிகாமம் கல்வி வலயத்தில் தரம் II பாடசாலைகளில் சித்திவீதம் கூடிய முதலாவது பாடசாலையாக எமது பாடசாலை தெரிவுசெய்யப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | பெயர் | புள்ளிகள் |
|---|---|---|
| 1 | செல்வன்.ஸ்ரீ.ரிஷவர்மன் | 162 |
| 2 | செல்வன்.மு.கவியரசன் | 156 |
| 3 | செல்வன்.மு.கலையரசன் | 149 |
| 4 | செல்வி.ஜி.ஜிந்துஜா | 135 |
| 5 | செல்வன்.ர.சுகிர்தன் | 131 |

இவர்கள் அனைவருக்கும் இன்று பரிசில் வழங்கி கௌரவிக்க உள்ளோம். இவர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

தமிழ்த்தினப் போட்டி,ஆங்கிலதினப்போட்டி, உடற்பயிற்சிக் கண்காட்சி, பாடசம்பந்தமான போட்டிகள், குடும்ப ,கோட்ட ,வலயமட்ட மெய்வல்லுநர் போட்டிகள்,நிறுவனங்களால் நடாத்தப்படுகின்ற போட்டிகள் பலவற்றிலும் எமது பாடசாலை மாணவர்கள் பங்குபற்றி வெற்றி அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வெளிவாரி மதிப்பீடு

*பாடசாலைக் கல்விச் செயற்பாட்டில் பண்புசார் விருத்தி*

08.05.2012 அன்று வலிகாமம் கல்வி வலயத்தால் மேற்கொள்ளப்பட்ட பாடசாலைக் கல்விச் செயற்பாட்டில் பண்புசார் விருத்தி – வெளிவாரி மதிப்பீட்டில் 76 புள்ளிகளை எமது பாடசாலை பெற்றுக்கொண்டது. இது பாடசாலை இன்று பல்வேறு துறைகளிலும் மிக உயர்ந்த அடைவுமட்டத்தில் உள்ளமையைக் காட்டுகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாடசாலை நிர்வாகம் :-**

எமது பாடசாலையின் நிர்வாகம் திறம்பட நடைபெறுவதற்கு சகல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கும் அன்பிற்கும் மதிப்பிற்க்குமுரிய உபஅதிபர்,ஆசிரியர்கள்,கல்விசாரா ஊழியர்கள் தமது கடமைகளை செவ்வனே ஆற்றி வருகின்றார்கள். இவர்களின் தன்னலமற்ற பணிமேலும் சிறப்படைய வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் உரித்தாகுக. எமது பாடசாலைக்கு கொ/கணபதி இந்து மகளிர் வித்தியாலயத்திலிருந்து திருமதி.கமலநாயகி சிவலோகநாதன் ஆசிரியையும் யா/கொக்குவில் சி.சி.த.க பாடசாலையில் இருந்து திருமதி.சத்தியவதி கிருபாகரன் ஆசிரியையும்இடமாற்றலாகி எமது பாடசாலைக்கு வருகை தந்துள்ளனர். நல்லாசிரியைகளான இவர்களை மனமகிழ்ச்சியுடன் வரவேற்கின்றேன். தற்காலிக இணைப்பில் யா/நடேஸ்வராக் கல்லூரியில் இருந்து திருமதி.பன்னீர்ச்செல்வி சந்திரரூபன் ஆசிரியை யா/புங்குடுதீவு இந்து மகாவித்தியாலயத்திலிருந்து திருமதி.சுதாயினிகிருஸ்ணா ஆசிரியை கிளி/பரந்தன் இந்து மகாவித்தியாலயத்திலிருந்து திருமதி.யாழினி நிமலானந்தன் ஆகியோர் எமது பாடசாலையில் கடமையைப் பொறுப்பேற்றுள்ளனர். இவர்களையும் மனமகிழ்வுடன் வரவேற்கின்றேன். எமது பாடசாலையில் 4 ஆண்டுகள் சேவையாற்றிய விஞ்ஞான ஆசிரியர் திரு.சி.கணேசகுமார் உடுவில் கோட்ட விஞ்ஞான ஆசிரிய ஆலோசகராகப் பதவியுயர்வு பெற்று மாற்றலாகிச் சென்றுள்ளார். இவர் மேலும் பல பதவியுயர்வுகள் பெற்று வாழ வாழ்த்துகின்றேன்.எமது பாடசாலையில் கடந்த 22 வருடங்களாக ஆரம்பப்பிரிவு ஆசிரியராகக் கடமையாற்றி யா/வேலணை சரஸ்வதி வித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற திருமதி.வா.சிவநேசன் ஆசிரியை அவர்களுக்கும் கடந்த 13 ஆண்டுகளாக ஆரம்பப்பிரிவு ஆசிரியராகக் கடமையாற்றி யா/தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கு இடமாற்றலாகிச் சென்ற திருமதி.பா.பாலகுமாரன் அவர்களுக்கும் எமது பாடசாலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது கடமைகளைத் தவறாது செய்து எவ்வாறு சேவையாற்றினார்களோ அதேபோன்று தற்போதைய பாடசாலையிலும் சேவையாற்றவும் சிறந்ததேகா ரோக்கியத்துடனும், சகல செளபாக்கியங்களுடனும் தமது குடும்பத்தாருடன் இனிது வாழவும் வாழ்த்துகின்றேன்.

*ஓய்வு*

எமது பாடசாலையில் கடந்த 22 வருடங்களாக பகுதித்தலைவராகவும் , தமிழ் ஆசிரியராகவும் சேவையாற்றி 01.07.2012 அன்று ஓய்வு பெற்ற திருமதி. இ. பாலச்சந்திரன் நல்லாசிரியை அவர்களும் தேக ஆரோக்கியத்துடனும், சகலசெளபாக்கியங்களுடனும் தமது குடும்பத்தாருடன் இனிது வாழவும் வாழ்த்துகின்றேன்.

## இணைபாட விதான செயற்பாடுகள் :-

இணைபாட விதான செயற்பாடுகளில் ஒன்றான விளையாட்டுத் துறைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகளை நடாத்தி வருகின்றோம். விளையாட்டுத்துறை செயலாளராக திரு.ச.தயானந்தன் ஆசிரியர் அவர்கள் சிறப்பாகக் கடமையாற்றினார். இவ் விளையாட்டுப் போட்டிக்கு எமது பாடசாலையில் கடமையாற்றும் சகலரும் முழுமையாக ஒத்துழைத்து பயிற்சி அளித்து வெற்றிபெறச்செய்து விளையாட்டுக்களின் மூலம் மாணவர் பெறும் அதிஉன்னத ஆற்றல்களை விருத்திசெய்துள்ளனர். அவ்வாறே கோட்டமட்ட வலயமட்ட மாவட்டமட்டப் போட்டிகளுக்கும் தமது ஊக்குவிப்பை வழங்கி செயற்படுகின்றனர்.

## உதைபந்தாட்டம் 2012

எமது பாடசாலையின் 16 வயதுப் பிரிவு அணி உதைபந்தாட்டப் போட்டிகளில் கலந்துகொண்டது. இவ் அணி கோட்ட மட்டத்தில் விளையாடி மூன்றாமிடத்தைப் பெற்றுக்கொண்டது. வலயமட்டத்தில் விளையாடத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவுசெய்யப்பட்டுள்ளது. திரு.ச.தயானந்தன் ஆசிரியர் அவர்கள் இத்துறைக்குப் பொறுப்பாக இருந்து வழிநடத்தி வருகின்றார். இவ் விளையாட்டுத் துறை மேலும் வளர எனது வாழ்த்துக்கள்.

## உடற்பயிற்சி அணி:-

2012 ஆம் ஆண்டு உடற்பயிற்சி அணிகளுக்கு எமது பாடசாலையில் பயிற்சிகள்வழங்கப்பட்டன.யாழ்.பலகலைக்கழக உடற்கல்வி இறுதி ஆண்டு மாணவர்களான செல்வன்.எஸ்.ஜெபநேசன், செல்வன்.எஸ்.தனசீலன் ஆகியோர் தீவிரபயிற்சிகளை வழங்கினர். ஆண்கள் உடற்பயிற்சிஅணிக்கு திரு.ச.தயானந்தன் ஆசிரியரும்,பெண்கள் உடற்பயிற்சி அணிக்குத் திருமதி.சி.கருணாநிதி, திருமதி.வ.செல்வறஞ்ஜன் ஆசிரியைகளும் பொறுப்பாக இருந்து வழிநடத்தினர். இவ்வணியினர் இவ்வாண்டு வலயமட்டத்தில் இரண்டாமிடத்தையும், மாவட்ட மட்டத்தில் நான்காம் இடத்தையும் பெற்று வெற்றியீட்டியுள்ளனர். எதிர்காலத்தில்தேசிய மட்டம்வரை இவ்அணிகள் சென்று வெற்றியீட்ட எனது வாழ்த்துக்கள்

## சிறுதோழியர் அமைப்பு:-

இவ் அமைப்பானது பாடசாலையில் ஆரம்பப் பிரிவு மட்டத்தில் இரு அணிகளைக் கொண்டதாக சிறப்பாக இயங்கிவருகின்றது. இதற்கு திருமதி.ச.ஜெயசீலன், திருமதி..சி. கருணாநிதி ஆகிய ஆசிரியர்கள் பயிற்சி அளித்துவருகின்றனர்.

## பரியோவான் முதலுதவிப்படை:-

இடைநிலைப்பிரிவில் 50 மாணவர்களைக் கொண்ட படையணி ஒன்று பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. திருமதி.வ. செல்வறஞ்ஜன் உபஅதிபர் அவர்கள் பொறுப்பாக இருந்து இதனை சிறப்பாக வழி நடத்தி வருகின்றார். மாவட்ட ஆணையாளர் திரு.செ.செல்வறஞ்சன் அவர்கள் இதற்கான முழுவழி நடத்தல்களையும் சிறப்பாக ஆற்றிவருகின்றார். அவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இத்துறை மேலும் வளர எனது வாழ்த்துக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கணனிக் கல்வி:-**

எமது பாடசாலயில் 10 கணனிகள் மாணவர்களின் பாவனைக்காக உள்ளன. தரம் 1- 11 வரையான மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு இவை பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இககல்வியை திரு.சி.கோகுலன் (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்) அவர்கள் பொறுப்பேற்று வழிநடத்திவருகின்றார். இக் கணனிகள் கல்விச்செயற்பாட்டிற்கு போதுமானவை அல்ல. மேலும் இச் செயற்பாட்டை வலுப்படுத்த பல கணனிகள் தேவையாக உள்ளன. இதனை பூர்த்திசெய்ய பாடசாலைச் சமூகமும் நலன்விரும்பிகளும் மிக துரித நடவடிக்கை எடுத்துதவுமாறு இன்றைய நன்நாளில் கேட்டுக்கொள்கின்றேன்.

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றோருக்கான பரிசில்கள்

மேற்படி பரீட்சையில் சித்தியடைந்த 3 மாணவர்களுக்கும் தாவடி அம்பலவாண வேத விநாயகர் ஆலய தலைவர் தலா ஆயிரம் ரூபாவும், தாவடி புவனேஸ்வரி அரியராசா நிதியம் தலா இரண்டாயிரம் ரூபா வீதமும் கௌரவ ஆளுநர் அவர்கள் தலா ஐந்தாயிரம் ரூபா வீதமும் இணுவில் லயன்ஸ் கழகம் பெறுமதியான பரிசில்களையும் இது வரை வழங்கியுள்ளனர். இவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்றங்கள்:-

| அமைப்பு | பொறுப்பாசிரியர்கள் | செயற்பாடுகள் |
|---|---|---|
| தமிழ் மன்றம் | திருமதி.வி.தயாபரன் | தமிழ்த்தின விழா கோட்ட வலய மட்டங்களுக்கு பயிற்சி வழங்கல். |
| இந்து மாமன்றம் | செல்வி.மா.மகாலட்சுமி | வாணிவிழா, சமய நிகழ்ச்சிகள் நடாத்தல். சமய அறிவுப்போட்டிக்கு தயார்செய்தல். |
| கணித மன்றம் | திருமதி.ப.மகேந்திரன் | கணிததினவிழா புதிர்ப்போட்டிகள் கல்விச்சுற்றுலா |
| விஞ்ஞான மன்றம் | திரு.க.சிவலோகநாதன் | விஞ்ஞானதினம் புதிர்ப்போட்டிகள் |
| ஆங்கில மன்றம் | திருமதி.வ.செல்வறஞ்ஜன் | ஆங்கிலதினம் கோட்ட வலய மட்டபோட்டிக்கு தயார்செய்தல். கல்விச்சுற்றுலா |
| வரலாறு புவியியல் மன்றம் | திருமதி.பு.சர்வானந்தா | கண்காட்சி பொது அறிவுப்போட்டி ஆக்கத்திறன் போட்டிகள் |
| வர்த்தக மன்றம் | செல்வி.மா.மகாலட்சுமி | வணிகப்போட்டிக்கு தயார்செய்தல் |
| கவின் கலை மன்றம் | திரு.ச.தயானந்தன் திருமதி.ய.லிங்கேஸ்வரன், திருமதி.வி.தயாபரன் | கலைநிகழ்ச்சிக்கு ஒழுங்கு செய்தல் |
| ஆரம்பப்பிரிவுமன்றம் | திருமதி.சி.கருணாநிதி, திருமதி.சா.மயூரன் | மன்றக்கூட்டம் கலைநிகழ்ச்சிகள் |
| ஆனர்த்தமுகாமைத்துவ மன்றம் | திருமதி.ச.கிருபாகரன் திருமதி சா.மயூரன் | விசேடநிகழ்ச்சிகள் ஆக்கச்செயற்பாடுகள் |
| விசேட கல்வி | திருமதி.ச.கிருபாகரன் | விசேடநிகழ்ச்சிகள் ,அரங்கச் செயற்பாடுகள் |
| சுகாதார மன்றம் | செல்வி.மா.மகாலட்சுமி | சுகாதாரமேம்பாடு குறைபாடுகளைக்கண்டறிதல் |
| சித்திரக் கழகம் | திரு.ச.தயானந்தன் | சித்திரப்போட்டி சித்திரஆக்கம் கலைநிகழ்ச்சிகள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலகம்:-

நல்ல நூல்கள் நாட்டின் பெறற்கரிய பொக்கிசங்கள் ஏன்பதற்கிணங்க, அந்நூல்களை வாசிப்பவர்கள் அவர்களை அறியாமலேயே அறிஞர்கள் ஆகின்றனர். இந்த வகையில் எமது பாடசாலை நூலகம் மாணவர்களுக்கு உன்னதமான சேவையை வழங்கி வருகின்றது. திருமதி.வி.தயாபரன் ஆசிரியர் அவர்கள் இதற்குப் பொறுப்பாக இருந்து வழிநடத்தி வருகின்றார். தமிழ் நூல்கள் 270,ஆங்கில நூல்கள் 47,சிங்கள நூல்கள் 45 உள்ளன. உதயன், தினக்குரல் ஆகிய பத்திரிகைகளை ஆசிரியர் கழகம் வழங்கிவருகின்றது. அன்றாடம் நிகழும் நிகழ்வினையும் பொது அறிவினையும் மாணவர்கள் பெற்றுக் கொள்ள வழியேற்படுகின்றது. நூலகப் பாடவேளை தவிர ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வகையில் கழிப்பதற்காகவும் தேடலுக்காகவும் மாணவர்கள் நூல்களை வீடுகளுக்கு எடுத்துச்சென்று வாசிப்பது குறிப்பிடத்தக்கதோர் அம்சமாகும்.

## உலக உணவுத்திட்டம் :-

2006 நவம்பர் மாதத்தில் இருந்த இலங்கை அரசும் உலகஉணவுத்திட்டமும் இணைந்து கல்விக்கான உணவு ஊட்டல் நிகழ்ச்சித்திட்டமாக இது பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. வெளிநாடுகளிலிருந்து கிடைத்த நலன்விரும்பிகளின் நிதி உதவி நிறுத்தப்பட்டுள்ள போதிலும் மாணவர்களுக்கு மிகத்தரமான புரியாணி உணவு வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இதனை சிறப்பாக வழிநடத்திவரும் எமது பாடசாலை ஆசிரியைகள் திருமதி.சி.கருணாநிதி, திருமதி.ப.மகேந்திரன் திருமதி ச.கிருபாகரன் ஆகியோர்கள் இந்த நேரத்தில் நன்றியுடன் நினைவுகூரத்தக்கவர்கள். இதன்பலனாக எமது பாடசாலை மாணர்கள் சிறந்த சத்துணவைப்பெற்று உடல்நல ஆரோக்கியமுள்ளவர்களாக வளர்ந்து வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலக உணவுத்திட்ட மதியஉணவை மேலும் சுவையூட்டலும் போசாக்கூட்டலும்

தாவடி நலன்புரிச்சங்கம் 3 தேங்காய், 250 கிலோ கிராம் சோயா மீற், 250 கிராம் மிளகாய்த்தூள் ஆகியவற்றை தினமும் வழங்க முன்வந்துள்ளது. இவை இச்சங்கத்தினால் 2013 ஆம் ஆண்டு தொடக்கம் பொருட்களாக வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

## பசும்பால் வழங்கல்

இலங்கை அரசாங்கம் 2012 ஆம் ஆண்டு முதல் ஒரு மாணவனுக்குத் தினமும் 150 மில்லி லீற்றர் பால் வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. எமது பாடசாலைக்கு இதற்கான ஒரு நாளுக்கான செலவு 1875 ரூபா ஆகும். இதனால் மாணவர்களின் உடல் , உள ஆரோக்கியம் மேம்பட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. திருமதி.ச.கிருபாகரன் ஆசிரியை இதற்குப் பொறுப்பாக இருந்து சிறப்பாக வழிநடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## முட்டை வழங்குதல்

மாணவர்களின் போசாக்குக் கருதி முட்டை வழங்கல் சம்பந்தமாக பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தைக் கூட்டிய போது 99 வீதமான பெற்றோர்கள் இதற்கு ஆதரவு வழங்கினர். எனவே பாடசாலை நிர்வாகம் சகல மாணவர்களுக்கும் முட்டை வழங்கத் தீர்மானித்தது. இதனால் மாணவர்களின் உடல் , உள ஆரோக்கியம் மேம்படுவதை கண்கூடாகக் காணமுடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைஉயர்மட்ட கல்விச் செயற்பாட்டுக்கான நிதி ஒதுக்கீடு

ஆசிரியர் அடிப்படைச் செயற்பாடுகள் ஆரம்பம், இடைநிலை மாணவர் அடிப்படைச் செயற்பாடுகள் ஆரம்பம், இடைநிலை நுகர்பொருளும் திருத்தமும் ஆரம்பம் இடைநிலை. நிரந்தரப் பொருள் ஆரம்பம், இடைநிலை, S.D.M.G ஆகியவற்றுக்காக 2012 இல் நிதி ஒதுக்கீடுகள் இடம்பெற்றுள்ளன. தகுந்த முறையில் பயன்படுத்தப்பட்ட இந்நிதி மூலம் மாணவர்களும் ஆசிரியர்களும் பல விதமான அனுபவங்களையும் புத்தாக்க மிளிர்வுகளையும் பெற்றுள்ளமை கண்கூடு.

## யுனிசெவ் பிள்ளைநேய பாடசாலை அபிவிருத்தி திட்ட நிதி ஒதுக்கீடு- 2012

இத்திட்டத்தின் கீழ் யுனிசெவ் நிறுவனம் ரூபா 100000 ஐ வழங்கவுள்ளது. சைக்கிள் தரிப்பிட நிலம் போடுவதற்கு 40000 ரூபாவும், மாணவர்களின் கற்றல் உபகரணம் கொள்வனவு செய்வதற்கு 60000 ரூபாவும் செலவிடப்படவுள்ளன. இதனால் எமது பாடசாலை மாணவர்கள் மிகுந்த பயனடையவுள்ளனர்.

## பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்கான உளசமூக இடையீட்டு ஆதரவு மற்றும், ஆலோசனை வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டம்

இதற்கென யுனிசெவ் நிறுவனம் 10000 ரூபாவை வழங்கியுள்ளது. இதனால் 02.10.2012 அன்று எமது பாடசாலையில் உளநல நாள் கொண்டாடப்பட்டது. இதில் சித்திர ஆக்கம், "உளநலம் பேணுவோம்" சஞ்சிகை என்பன வலய மட்ட போட்டிக்காக கோட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குப் பொறுப்பாக இருந்து சிறப்பாக வழிநடத்திய திருமதி.ச.கிருபாகரன் ஆசிரியர் அவர்களைப் பாராட்டுகின்றேன்.

**கட்டாயக் கல்விக்குழு :-**

கட்டாயக் கல்விக் குழு கூட்டம் மாதாந்தம் நடைபெறுகின்றது. பாடசாலைக்குச் சமூகம் அளிக்காத பாடசாலை செல்லாத மாணவர்களை தேடியறிந்து மீண்டும் கல்வியில் இணைக்கும் நடவடிக்கைகளில் இக் குழு ஈடுபட்டு வருகின்றது. இதற்கு ஒத்துழைப்பு வழங்கும் அனைவருக்கும் பாராட்டுக்களும் நன்றிகளும். திருமதி.வ.செல்வறஞ்சன் உப அதிபர் இதற்குப் பொறுப்பாக இருந்து சிறப்பாக வழிநடத்தி வருகின்றார்.

**பான்ட் வாத்தியக்குழு :-**

03.10.2011 இல் ஆரம்பப்பிரிவு, இடை நிலைப்பிரிவுகளுக்கான பான்ட் வாத்திய உபகரணங்கள் பழைய மாணவர்களினாலும், நலன்விரும்பிகளினாலும், பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தினாலும் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. திருமதி.சுதாமதி கோவர்த்தனன் ஆசிரியை அவர்கள் இதற்கான பயிற்சிகளை சிறப்பாக வழங்கி வருகின்றார். திருமதி.ச.ஜெயசீலன், திருமதி.ய.லிங்கேஸ்வரன் ஆகிய ஆசிரியர்கள் இதற்குப் பொறுப்பாக இருந்து இதனைச் சிறப்பாக வழிநடத்தி வருகின்றனர்.

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம் :-**

இச் சங்கம் பாடசாலை அபிவிருத்தி கருதி பெரும் பங்களிப்புச் செய்யும் அமைப்பாக அதிபரின் தலைமையின் கீழ் இயங்கி வருகின்றது. புாடசாலையின் அபிவிருத்திச் செயற்பாட்டிற்கு பங்களிப்புக்களையும் அன்பளிப்புக்களையும் நல்கும் உறுப்பினர்கள் அனைவருக்கும் இச் சந்தர்ப்பத்தில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி.ப.மகேந்திரன் ஆசிரியர் பொருளாளராகவும், திருமதி.ம.மதுரேஸ்வரி செயலாளராகவும் இருந்து இச்சங்கத்தை சிறப்பாக வழிநடத்தி வருகின்றனர். இவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

## ஆசிரியர் கழகம்:-

எமது பாடசாலையின் ஆசிரியர் கழகமானது பாடசாலையில் சேவைபுரியும் ஆசிரியர் குடும்பங்களின் சகல நிகழ்வுகளிலும் நலனோம்பல்களிலும் கழக அங்கத்தவர்கள் முழுமையாகப் பங்குபற்றி தமது ஒற்றுமையையும் ஒத்துழைப்பையும் வழங்கிவருகின்றனர். அத்துடன் புதிதாக கடமைக்கு வரும் ஆசிரியர்களை உவகையுடன் அங்கத்தவராக இணைத்து மகிழ்கின்றது. தமது தேவைகள் கருதி மாற்றலாகிச்செல்பவர்களுக்கும் ஓய்வுபெற்றுச் செல்பவர்களுக்கும் பிரிவுபசாரமும் நினைவுப்பரிசில்களும் வழங்கிக் கௌரவித்து வருகின்றது.

## பழைய மாணவர் சங்கம் :-

பாடசாலையின் பௌதீக, மனிதவள விருத்திக்கு பாடசாலை எங்களுடையது என்ற உணர்வுடன் பழைய மாணவர் சங்கமானது ஏனைய பழைய மாணவவர் சங்கங்களுக்கு முன்னுதாரணமாக பல்வேறு உதவிகளை வழங்கி வருகின்றது. இவ் உதவிகளினால் பாடசாலை மாணவர்களின் கற்றல் கற்பித்தல் மேம்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது. பழைய மாணவர் சங்கத்தினூடாக புலமபெயர் நாடுகளில் வாழும் தாவடியூர் மக்கள் பல உதவிகளை வழங்கி வருவது எமக்கு மிக மனமகிழ்வைத்தருகின்றது. பழைய மாணவர் சங்க உறுப்பினர்களாக பின்வருவோர் செயற்படுகின்றனர்.

1) திரு.நா.சிவனேசன் - தலைவர்
2) திரு.க.தேவராசா - உபதலைவர்
3) திரு.பா.சண்முகரத்தினம் - பொருளாளர்
4) திரு. ந.லோகேஸ்வரன் - செயலாளர்
5) திரு.மு.மாசிலாமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6) திரு.இ.சரவணபவன்

7) திரு. க. அருட்செல்வம்

8) திரு. சு.சுஜீபன்

இவ்வாண்டு எமது பாடசாலை மாணவர்களின் விளையாட்டு ஆற்றலை மேலும் வலுப்படுத்தும் நோக்கோடு பழைய மாணவர்களின் உதவியுடன் 4500000 ரூபா பெறுமதியான காணி கொள்வனவு செய்யப்பட்டு பாடசாலைக்குச் சொந்தமான முதலாவது விளையாட்டு மைதானம் உருவாக்கப்பட்டுள்ளது. இவ் அரிய பணிக்கு உதவிய பழைய மாணவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## சைக்கிள் தரிப்பிடம் அமைப்பு

பாடசாலையின் தென்கிழக்குத் திசையில் 50 அடி நீளம், 8 அடி அகலத்தில் சைக்கிள் தரிப்பிடம் ஒன்று அமைக்கப்பட்டு இன்று திறந்து வைக்கப்படுகின்றது. இதற்கு சுதர்சா மின்தறி நிலையத்திலிருந்து எடுக்கப்பட்ட ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான மரம், சலாகை, தூண்கள், சீற் ,கொங்கிறீற் கற்கள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. பழைய மாணவர் சங்க நிதியிலிருந்து இது புனரமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. யுனிசெவ் நிறுவனம் 40000 ரூபா செலவில் நிலம் போட்டுத்தந்துள்ளது.


சுதர்சா மின்தறி நிலையக் காணிக் கொள்வனவு - 2012



பழையநிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதியநிலை

பாடசாலையின் மேற்கு எல்லையில் இருந்த 4 பரப்புக் காணியை பழைய மாணவர் சங்கம் 09.08.2012 இல் கொள்வனவு செய்து பாடசாலைக்கு என வழங்கியுள்ளது. இதனால் புதிய சொந்தமான விளையாட்டு மைதானம் ஒன்று தோன்றியுள்ளது.

எனது சகபாடியாகிய ஐக்கிய அமெரிக்காவில் வாழும் நண்பர் திரு.வே.கணேஸ்வரா, யாதாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையால் மறக்கமுடியாத ஒருவர். இவர் தாவடி மண்ணின் மேலும் பாடசாலையின் மேலும் அளவுகடந்த பற்றுடையவர். இவரது பெருமுயற்சியின் பலனாகவே மூன்றில் இரண்டு பங்கு நிதி காணிக்கொள்வனவிற்குக் கிடைத்தது. பல நாடுகளிலுமுள்ள தனது உறவினர்கள், நண்பர்களுடன் தான் தொடர்பினை ஏற்படுத்தி பின்பு அதிபராகிய என்னையும் தொடர்பினை ஏற்படுத்துவதற்கு தூண்டுவார். இதன்படி பெருமளவு நிதி சேர உதவியவர். வருடாந்தம் தனது தந்தையாரின் ஞாபகார்த்தமாக எமது பாடசாலையின் பரிசளிப்பு விழாவினை தனது சொந்தச் செலவில் செய்து வருவது குறிப்பிடத்தக்கது. இவ்வாண்டும் 75000 ரூபா செலவில் இப்பரிசளிப்பு விழாவினை செய்கின்றமை குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர் க.தேவராஜா காணிக் கொள்வனவிற்கான நிதி சேகரிப்பு, கொள்வனவு போன்றவற்றிற்கு அஞ்சாநெஞ்சத்துடன் என்னோடு தோளோடு தோள் நின்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைத்தவர். எமது பாடசாலையின் வளர்ச்சியுடன் பின்னிப்பிணைந்தவர். நூற்றுக்கணக்கான வீடுகளிற்கு என்னுடன் வந்து நிதி சேகரிப்பிற்கு உதவியவர். வெளிநாடுகளுடன் தொடர்பு கொண்டு நிதிசேகரித்தவர். காணிகொள்வனவை ஒரு சிறிய விடயமாக்கியவர் பேராசிரியர்.

திருவாளர் இ.சரவணபவன் தாவடி மண் பெற்றெடுத்த ஓர் அருளாளர். இவர் பாடசாலையில் காணிக்கொள்வனவிற்கான முதலாவது கூட்டம் நடைபெற்றவேளையில் பாடசாலையின் வளவில் விழுந்திருந்த 5 ரூபாவை என்னிடம் தந்து காணிக்கொள்வனவிற்கான முதலாவது நிதியாக இதனை வைத்துக்கொள்ளுங்கள் எனக்கூறினார். அதிலிருந்து நிதி 4500000 ரூபாவாக வளரவும், கொள்வனவிற்கு பயமின்றி இறுதிவரை எனக்கு கைகொடுத்தவராகவும் இவ் அருளாளர் விளங்குகின்றார். திருவாளர் மா.சண்முரத்தினம் (பொருளாளர்) கணக்கியலின்படி நிதியைக் கையாண்டும் நிதிசேகரிப்பிற்கும் உதவியவர். அதிபரான இவர் சட்டரீதியாக இக்காணி கொள்வனவு செய்யப்பட உதவியவர்.

திருவாளர் ந.லோகேஸ்வரன் (செயலாளர்) அவர்கள் ஆசிரியர் என்பதனால் காணி சட்டப்பிழையின்றிக் கொள்வனவு செய்யப்படவேண்டும் என்பதில் உறுதியாக நின்று என்னை வழிநடத்தியவர். எமது பழைய மாணவர் சங்க நடவடிக்கைளுக்கு அயராது உழைப்பவர்.

Dr.பொ.இராமநாதன் அவர்கள் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கு எனக்குப் பலவழிகளில் உதவி சட்டரீதியாக இக்காணி கொள்வனவு செய்ய உதவியவர்.

அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்ட 48 அன்பர்களும் இச்சிவப்பணியாகிய விளையாட்டு மைதான 4 பரப்புக் காணிக் கொள்வனவிற்கு உதவியவர்கள். நிதிப்பிரமாணங்களுக்கு அமைய காணிக்கொள்வனவு இடம்பெற்றது. இவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைப் பாடசாலைச் சமூகத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதர்சா மின்தறி நிலைய காணிக்கொள்வனவிற்கு உதவியோர்

| இல | திகதி | தொகை | பெயர் |
|---|---|---|---|
| | 01.01.2012 | 25359.78 | ஆரம்ப இருப்பு |
| 1 | 05.03.2012 | 350000.00 | திரு.சி.சிவநாதன் (கனடா) |
| 2 | 05.03.2012 | 350000.00 | திரு.தி.மோகனராஜா (கனடா) |
| 3 | 28.02.2012 | 300000.00 | திரு.வே.கணேஸ்வரா (அமெரிக்கா) |
| 4 | 10.04.2012 | 250000.00 | திரு.பொ.சுப்பிரமணியம் (சுவிஸ்) |
| 5 | 23.02.2012 | 200000.00 | திருமதி.ஆ.சதானந்தன் (லண்டன்) |
| 6 | 06.03.2012 | 200000.00 | திரு.ந.பாஸ்கரன் (கனடா) |
| 7 | 06.03.2012 | 200000.00 | திரு.சி.சிவநாதன் (கொழும்பு) |
| 8 | 29.03.2012 | 200000.00 | திரு.வ.கணேசலிங்கம் (தாவடி) |
| 10 | 06.03.2012 | 125000.00 | திரு.த.சிவபாலன் (கனடா) |
| 11 | 08.03.2012 | 121000.00 | திரு.சு.சத்தியானந்தன் (கனடா) |
| 12 | 29.06.2012 | 103000.00 | திரு.த.கருணாகரன் (லண்டன்) |
| 13 | 02.03.2012 | 100000.00 | திரு.வ.சங்கரசிவம் (கனடா) |
| 14 | 06.03.2012 | 100000.00 | திரு.ஜெ.பிரபாகரன் (கனடா) |
| 15 | 06.03.2012 | 100000.00 | திரு.ஜெ.தயாபரன் (கனடா) |
| 16 | 23.03.2012 | 100000.00 | திரு.வீ.சிவகுணன் (கனடா) |
| 17 | 27.03.2012 | 100000.00 | திரு.ஜெ.ஜெயசீலன் (கனடா) |
| 18 | 16.04.2012 | 100000.00 | திரு.இ.ஞானசேகரம் (ஜேர்மனி) |
| 19 | 23.04.2012 | 100000.00 | திரு.த.பாஸ்கரன் (கொழும்பு) |
| 20 | 23.04.2012 | 100000.00 | திரு.வீ.இளங்கோவன் (லண்டன்) |
| 21 | 23.04.2012 | 100000.00 | திரு.சி.சிவகுமார் (லண்டன்) |
| 22 | 29.06.2012 | 100000.00 | திரு.இராஜ்குமார் (நோர்வே) |
| 23 | 19.07.2012 | 100000.00 | திரு.ப.ஞானேந்திரகுமார் (நோர்வே) |
| 24 | 12.03.2012 | 100000.00 | திரு.இ.சண்முகரத்தினம் (கனடா) |
| 25 | 06.03.2012 | 100000.00 | திரு.பா.சிவபாலன் (அமெரிக்கா) |
| 26 | 10.04.2012 | 75000.00 | தியாகராஜா குடும்பம் (கனடா) |
| 27 | 10.04.2012 | 50000.00 | திரு.அ.குகநேசன் (கனடா) |
| 28 | 02.03.2012 | 50000.00 | திரு.ப.கிரிதரன் (கொழும்பு) |
| 29 | 14.03.2012 | 50000.00 | பெயர் குறிப்பிட விரும்பாத அன்பர் (கனடா) |
| 30 | 09.05.2012 | 50000.00 | செல்வி.சுகந்தி சிவப்பிரகாசம் (கொழும்பு) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 31 | 20.05.2012 | 50000.00 | திரு.க.தர்மரட்ணம் |
| 32 | 27.06.2012 | 50000.00 | ஈஸ்வரன் (லண்டன்) |
| 33 | 06.07.2012 | 50000.00 | திரு.ச.மகிந்தன் (தாவடி) |
| 34 | 06.07.2012 | 50000.00 | திரு.இ.நேசகுமார் (தாவடி) |
| 35 | 07.07.2012 | 50000.00 | திரு.ந.முகுந்தன் (லண்டன்) |
| 36 | 26.04.2012 | 48229.24 | திரு.ஆ.கஜேந்திரன் (ஜேர்மனி) |
| 37 | 20.05.2012 | 30000.00 | திரு.சு.சிவசுதன் (சுவிஸ்) |
| 38 | 10.04.2012 | 25000.00 | திரு.தி.சத்தியமூர்த்தி (நோர்வே) |
| 39 | 10.04.2012 | 25000.00 | திரு.ந.சிவறஞ்சன் (கனடா) |
| 40 | 09.05.2012 | 25000.00 | திரு.ந.கெசதாஸ் (இத்தாலி) |
| 41 | 07.07.2012 | 25000.00 | திரு.ப.பகீரதன் (சுவிஸ்) |
| 42 | 10.07.2012 | 25000.00 | திரு.த.இந்திரசேகரன் (சுவிஸ்) |
| 4.3 | 12.07.2012 | 15000.00 | திரு.வி.கனகசபாபதி (ஓய்வுநிலை ஆசிரியர்) |
| 44 | 09.05.2012 | 10100.00 | திரு.சி.பரமானந்தம் (தாவடி) |
| 45 | 25.05.2012 | 10000.00 | திரு.தே.மயூரன் (லண்டன்) |
| 46 | 26.06.2012 | 10000.00 | திரு.சி.பாஸ்கரன் (லண்டன்) |
| 47 | 12.07.2012 | 5000.00 | Dr...சந்திரசேகரம் (தாவடி) |
| 48 | 12.08.2012 | 50000.00 | திரு.தர்மபாலன் (கனடா) |
| | மொத்தம் | 4552689.02 | |

## பாடசாலைத் தோட்டத்திற்கான குழாய் நீர்வசதி

பாடசாலையின் தோட்டத்திற்கு நேரடியாக நீர்ப்பம்பியிலிருந்து நீர்ப்பாய்ச்சுவதற்கான குழாய்களை திருவாளர் து.சிவராஜா (தொழிலதிபர்), திரு.பொ.நடராஜா (அண்ணா தொழிலதிபர்) ஆகியோர் 20000 ரூபா செலவில் தாமே பொருத்தித் தந்தனர். 5000 ரூபா பெறுமதியான பயிர்களுக்கு நீர்ப்பாய்ச்சும் குழாயினை திரு.ந.பரமேஸ்வரன் (யாழ்.இந்து ஆசிரியர்) வழங்கி உதவியுள்ளார். இவர்களுக்கும் நன்றிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை முற்றத்திற்கு மண்நிரப்புதல்

சுதர்சா மின்தறி நிலையம் உடைத்து எடுக்கப்பட்ட மண், கல் முதலியவை பழைய மாணவர் சங்கத்தின் நிதியுதவியுடன் 92 டிராக்டர் லோட்டுகளுக்கு மேல் முற்றத்திற்கு மண்நிரப்பப்பட்டுள்ளது. இதன் பயனாக பாடசாலை முற்றம் ஒரு அடி உயர்ந்துள்ளது. இதனால் பாடசாலை முற்றத்தில் மழை காலத்தில் ஒரு அடிக்கு மேல் வெள்ளம் பாயும் நிலை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மாணவர்கள் மழைகாலத்திலும் முற்றத்தில் இறங்கி உலாவக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

## தாவடியூர் பரமுவைத்தியர் நினைவுஅரங்கம்

லண்டனில் வசிக்கும் Dr.பொ.ஆறுமுகராஜா அவர்கள் ஏழு இலட்சம் ரூபா செலவில் எமது பாடசாலைக்கு பார்வையாளர் அரங்கம் ஒன்றை அமைத்துத் தந்துள்ளார்.20.06.2012 அன்று இது திறந்து வைக்கப்பட்டது. மாணவர்களின் இணைபாடவிதான செயற்பாடுகளுக்கும் கிடைத்த பேருதவியாக இது அமைந்துள்ளது.




## சப்பாத்து வழங்கல்

கருணை உள்ளங் கொண்ட Dr.பொ.ஆறுமுகராஜா அவர்கள் எமது பாடசாலையின் 47 மாணவர்களுக்கு 49123.00 ரூபா பெறுமதியான சப்பாத்துக்களை வழங்கி உதவியுள்ளார். இதனை எமக்குப் பெற்றுத்தந்த Dr.பொ.இராமநாதன் அவர்களுக்கும் திருமதி.கலைவாணி இராமநாதன் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆரம்பப்பிரிவிற்கான மின்கட்டணம்

எமது பாடசாலையின் பழைய மாணவரும் நல்லுள்ளம் கொண்டவருமான Dr.பொ.இராமநாதன் அவர்கள் ஆரம்பப்பிரிவிற்கான மின்கட்டணத்தைச் செலுத்தி வருகின்றார். இதுவரை 13500 ரூபா கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.

## பாடசாலை வளர்ச்சிக்கு இன்னும் தேவையானவை

1. பாடசாலையின் வடக்குப் புறத்தில் பிரதான கட்டடத்தோடு இணைந்த இரண்டு மாடி 60 அடி நீளக்கட்டடம்
2. நூல்நிலையத்திற்கான ஆயிரக்கணக்கான புதிய நூல்கள்.
3. 20 நவீன கணனிகள்
4. ரூபா பத்து இலட்சம் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு மாதாந்த வருமானம் தரக்கூடிய நிலையான வைப்பு.
5. பாடசாலையின் சுற்று மதில்களை பூசிப்பாதுகாத்தல்.
6. பாடசாலை நூலகத்திற்கு ஓர் நூலக ஆசிரியர்
7. ஆரம்பப்பிரிவுக்கு அதிகளவான மாணவர்களைச் சேர்த்தல்.
8. பரமு வைத்தியர் கேட்போர் கூட வீதிக்கான 80’ சுற்று மதில் பாடசாலைப் பாதுகாப்பிற்கு மிக அவசியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றியும் நிறைவும்

எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு துணையாக நிற்கும் எல்லாம்வல்ல இறைவனுக்கு சிரம் தாழ்த்தி நன்றியைத் தெரிவித்துக்கொண்டு இன்றைய நாளில் எமது அழைப்பை ஏற்று சிரமம்பாராது தனது வேலைகளையெல்லாம் ஒதுக்கிவைத்துவிட்டு அன்போடு ஐக்கிய அமெரிக்காவிலிருந்து தனது தந்தையார் அமரர் தா.வேலாயுதபிள்ளை ஞாபகார்த்தமாக மகன் வே.கணேஸ்வரா B.Sc.(Eng) Phdஅவர்கள் இப் பரிசளிப்பு விழாவினை நடாத்துவதையிட்டு அவருக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எமது பாடசாலையின் மனிதவளம் ,பௌதீகவளம் ஆகியவற்றை மேம்படுத்தி மாணவர்களின் கல்வி அடைவுமட்டம் சிறந்த முறையில் வளர்ச்சியடைய அயராது உழைத்துவரும் வலிகாமம் கல்வி வலயக் கல்விப்பணிப்பாளர் உயர்திரு. ஆ.ராஜேந்திரன் அவர்களுக்கும், எமக்கு பல்வேறு ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்கி பாடசாலை திறம்பட இயங்க வழிகாட்டிவரும் உடுவில் கல்விக் கோட்டத்தின் பதில் கோட்டக் கல்விப் பணிப்பாளரும் வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளருமாகிய உயர்திரு.சி.கந்தசாமி அவர்களுக்கும் வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளராக இருந்து எமது பாடசாலை சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு நல்கி வரும் உயர்திரு இ.தமிழ்மாறன் பிரதிக் கல்விப்பணிப்பாளர் கல்வி திட்டமிடல் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மற்றும் பிரதமவிருந்தினர் அவர்தம் பாரியார், ஆசியுரை வழங்கியோர், வாழத்துரை வழங்கியோர், சிறப்புவிருந்தினர்கள், கௌரவவிருந்தினர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், மாணவச்செல்வங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றி

திரு.நா.சிவநேசன் (அதிபர்)
யா/தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை
கொக்குவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2012 மாணவ முதல்வர்கள்




ஆரம்பப்பிரிவு பாண்ட் வாத்திய அணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




2012 இடைநிலைப்பிரிவு பாண்ட் வாத்திய அணி




15.10.2011அன்று தேசிய கைகழுவுதல் தினம் கொண்டாடப்பட்ட போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




2012 ஆம் ஆண்டு ஆரம்பப்பிரிவு உடற்பயிற்சி அணி




2012 உடற்பயிற்சி அணி ஆண்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




2012 உடற்பயிற்சி அணி ஆண்கள்



2012 உடற்பயிற்சி அணி பெண்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2012 உடற்பயிற்சி அணி பெண்கள்



தேசத்துக்கு நிழல் தேசிய மரநடுகை வேலைத்திட்டம்
15.11.2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேசத்துக்கு நிழல் தேசிய மரநடுகை வேலைத்திட்டம்
15.11.2012



19.11.2012 அன்று வடமாகாணக் கல்விக்குழுத் தலைவர் இரா.செல்வவடிவேல் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவரொருவருக்கு சான்றிதழ்களை வழங்கிக் கௌரவிக்கும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



19.11.2012 அன்று வடமாகாணக் கல்விக்குழுத் தலைவர் இரா.செல்வவடிவேல் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுடன்




2012 புத்தாக்கம் மாகாணமட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தரம்5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள்



சமூகவிஞ்ஞானப்போட்டி 2012 மாகாணமட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமூகவிஞ்ஞானப் போட்டி 2011 தேசிய மட்டம்



16 வயது உதைபந்தாட்ட அணி 2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2012 விஞ்ஞான விநாடி வினாப்போட்டி மாகாணமட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2012 பரிசு பெறுவோர் விபரம்
## (2011 பெறுபேற்றின் அடிப்படையில்)

**தரம் :- 01**

வகுப்பு நிலை :- 01. செல்வி.ஸ்ரீ.தர்மிகா
02. செல்வி மு.நிதுலா
03. செல்வி கு.கனுஜா
04. செல்வன்.பி.பிறேமஜீவன்
05. செல்வன்.து.கபிஷன்

**தரம் :- 02**

வகுப்பு நிலை :- 01.செல்வி சி.கம்சாளினி
02.செல்வி ஆ.சஜீபன் (குடும்பமட்டம் பண்ணிசைப் போட்டி 2ம் இடம், வாசிப்புப் போட்டி 1ம் இடம்)
03.செல்வன்.சி.கஜீபன்
04.செல்வி.சி.தரணிகா
05.செல்வன்.ந.சரண்ராஜ்

**தரம் :- 03**

வகுப்பு நிலை :- 01.செல்வன்.மு. துஷானந்
02.செல்வன்.கு.நிர்சன்
03.செல்வி.சி.தர்சாஜினி
04. செல்வி.ர.டினோஜா
05. செல்வி.ஸ்ரீ.பிரியங்கா
(குடும்பமட்ட பண்ணிசைப்போட்டி 3ம் இடம்)

**தரம் :- 04**

வகுப்பு நிலை :- 01.செல்வன்.ஸ்ரீ.ரிஷவர்மன்
02. செல்வி.சி.ஜிந்துஜா
03. செல்வன்.மு.கவியரசன்
04. செல்வன்.ர.சுஜிதன்
05. செல்வன்.மு.கலையரசன்

**தரம் :- 05**

வகுப்பு நிலை :- 01. செல்வி.உ.பபிதா
02. செல்வன் பி.யதுர்சன்
03. செல்வி சு.விஜிதா
04. செல்வி சு.தமிழினி
05. செல்வி கி.கிருஷாயினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் :- 06

வகுப்பு நிலை :-01.செல்வி.ஆ.கார்த்திகா (தமிழ், கணிதம், ஆங்கிலம், சுகாதாரம், வரலாறு, குடியுரிமைக்கல்வி, புவியியல் தொழில்நுட்பம், சமூகவிஞ்ஞானப் போட்டி 3ம் இடம்)

02.செல்வி.பு.கோபிகா (சமயம்)

03.செல்வி.ஶ்ரீமிதுசங்கா (சங்கீதம்)

செல்வன்.ச.நிகேந்ததன் (சித்திரம்)

## தரம் :- 07

வகுப்பு நிலை :- 01.செல்வன்.சு.கமிலன் (தமிழ், கணிதம், விஞ்ஞானம், சித்திரம்,சுகாதாரம்,குடியுரிமைக்கல்வி, பிரயோக தொழில்நுட்ப திறன், சமூகவிஞ்ஞானம் கோட்டமட்டம் 2ம் இடம்)

02. செல்வன்.சி.டனுசயன் (சமயம், தமிழ், வரலாறு, புவியியல், ஆங்கிலம், சமூகவிஞ்ஞானப் போட்டி கோட்டமட்டம் 1ம் இடம, வலயமட்டம் 1ம் இடம்)

03. செல்வன் ந.ரேணுஜன்

செல்வி.ப.பவியா - சங்கீதம்

செல்வி.பா.பிரியசுதர்சினி - நடனம்

## தரம் :- 08

வகுப்பு நிலை :- 01.செல்வன்.ச.அஜிந்தன் (,விஞ்ஞானம்,கணிதம், செயன்முறைத் தொழில்நுட்பம், தமிழ்) சமூகவிஞ்ஞானப் போட்டி கோட்டமட்டம் 2ம்இடம்)

:- 02. செல்வி.ஜெ.ஜெஸ்மி (புவியியல், நடனம், குடியுரிமைக்கல்வி)

:- 03. செல்வி.வ.தக்சனா

செல்வி.சிதனுசியா.:- சமயம்

செல்வி.பா.மாதங்கி - ஆங்கிலம், சுகாதாரம்

செல்வி.சு.கீர்த்திகா - வரலாறு, சித்திரம்

## தரம் :- 09

வகுப்பு நிலை :- 01.செல்வி.அ.சிந்துஜா (தமிழ், புவியியல், சித்திரம், சமயம்,கணிதம்,சுகாதாரம்,சங்கீதம்,குடியுரிமைகல்வி,விஞ்ஞானமும் தகவல்தொழில்நுட்பம்,

சமூகவிஞ்ஞானம்கோட்டமட்டம் 1ம் இடம், வலயமட்டம் 1ம்இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாணமட்டம் 3ம் இடம், தேசிய மட்டம் தெரிவு

02. செல்வி.ர.றெஜிந்தினி

03. செல்வன்.பா.பிரதாபன்

செல்வி.லக்சாஜினி - சங்கீதம்

## தரம் :- 10

வகுப்பு நிலை :- 01. செல்வி.ஆ.தனிஸ்ரா
(சமயம்,,விஞ்ஞானம்,கணிதம்,வரலாறு
வணிகப் போட்டி கோட்ட மட்டம் 1ம் இடம்)

02. செல்வி.பா.காஞ்சனா (மனையியல், குடியுரிமைக்கல்வி)

03. செல்வி.செ.கஜானி (தமிழ்)

செல்வி.க.கௌசிகா (ஆங்கிலம், வர்த்தகம், மனைப் பொருளியல் அறிவுப்போட்டி கோட்டமட்டம் 2ம் இடம்)

செல்வன்.மோ.துஸ்யந்தன் - விவசாயம்

செல்வி.கி.ரம்யா - சித்திரம்

செல்வி.ஸ்ரீ.செல்சிகா (மனைப் பொருளியல் அறிவுப்போட்டி கோட்டமட்டம் 2ம் இடம்)

## புலமைப்பரிசில் பரீட்சை - 2012 இல் வெற்றி பெற்று பரிசு பெறுவோர்

1. செல்வன்.ஸ்ரீ.ரிஷவர்மன் - 162 புள்ளிகள்
2. செல்வன்.மு.கவியரசன் - 156 புள்ளிகள்
3. செல்வன்.மு.கலையரசன் - 149 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.பொ.த (சா/த) 2011 இல் சித்தியடைந்து உயர்கல்வி பெறத்தகுதியுடையோர்.

| இல | பெயர் | Results | | | |
|---|---|---|---|---|---|
| 1 | கிருபாகரன் ஜெனார்த்தனன் | 5A | 3B | 1C | - |
| | | சமூகவிஞ்ஞானப் போட்டி கோட்டமட்டம் 1ம் இடம் | | | |
| 2 | லஜிதா சூரியகுமார் | 4A | 2B | 2C | 1S |
| 3 | கோஜிகா தயானந்தன் | 2A | 4B | 2C | 1S |
| | | சமூகவிஞ்ஞானப் போட்டி கோட்டமட்டம் 2ம் இடம், வலயமட்டம் 3ம் இடம் | | | |
| 4 | சிவகுமார் சுலக்சன் | 2A | 1B | 4C | 2S |
| 5 | திசாளினி சிவகுமார் | 2A | 4B | 1C | - |
| 6 | இரவீந்திரராஜா புவிராஜ் | 2A | - | 5C | 1S |
| | | சமூகவிஞ்ஞானப் போட்டி கோட்டமட்டம் 3ம் இடம், பதாகை தயாரிப்பு தேசியமட்டம் 3ம் இடம் | | | |
| 7 | லதுசா உதயகுமார் | 1A | 3B | 2C | 3S |
| | | வணிகப் போட்டி கோட்டமட்டம் 3ம் இடம் | | | |
| 8 | சொபிசா வரதராஜா | 1A | 3B | 2C | 2S |
| | | மனைப்பொருளியல் அறிவு போட்டி கோட்டமட்டம் 2ம் இடம் | | | |
| 9 | சுரேஸ்குமார் வினோஜன் | 1A | - | 5C | 2S |
| 10 | மனோகரன் கோபிதன் | 1A | - | 3C | 5S |
| 11 | லிங்கராஜாா அனன்ராஜ் | - | 1B | 3C | 3S |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுப் போட்டிகள்

1. செல்வி.இ.சாயந்தினி - 200 மீற்றர் ஓட்டம் - கோட்ட மட்டம் 1ம் இடம்
2. செல்வன்.ம.மதுராம் - 200 மீற்றர் ஓட்டம் - கோட்ட மட்டம் 2ம் இடம்
3. உடற்பயிற்சிப் போட்டி ஆண்கள் அணி
   வலயமட்டம் - 1ம் இடம்
   மாவட்ட மட்டம் - 4ம் இடம்
4. உடற்பயிற்சிப் போட்டி பெண்கள் அணி
   வலயமட்டம் - 2ம் இடம்
   மாவட்ட மட்டம் - 4ம் இடம்

## விசேட பரிசு பெறுவோர்

1) புத்தாக்கப் போட்டி - 2012
   கோட்ட, வலய, மாவட்ட மட்டம் 1ம் இடம்
   மாகாண மட்டம்
   1. செல்வன்.உ..பிரதாபன் - தரம் 11
   2. செல்வன்.த.கோபிகரன் - தரம் 10
   3. செல்வி.த.நிஷாந்தினி - தரம் 8
2) விஞ்ஞான விநாடி வினாப் போட்டி – 2012
   செல்வன்.சு.கமிலன்
   கோட்ட மட்டம் - 1ம் இடம்
   வலய மட்டம் - 3ம் இடம்
   மாகாண மட்டத்தில் பங்குபற்றினார்.
3) சமூகவிஞ்ஞானப் போட்டி – 2011- தேசியமட்டம்
   செல்வி.அ.சிந்துஜா
   கோட்ட மட்டம் - 1ம் இடம்
   வலய மட்டம் - 1ம் இடம்
   மாகாண மட்டம் - 3ம் இடம்
   தேசிய மட்டம்

4. சித்திரக் கலை மன்றம் நடாத்திய கோலப்போட்டி 2012 - பாடசாலை மட்டம்
   ஆ.கார்த்திகா - தரம் 7
   வி.மதன்ராஜ் - தரம் 8
   ஸ்ரீ.நிவேதன் - தரம் 8
   அ.சிந்துஜா - தரம் 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை ஆளணியினர்

1. திரு.நா.சிவநேசன் (அதிபர்)
   M.Ed,B.A.Dip.in.Edu(Merit) ,S.L.P.S
2. திருமதி.வ.செல்வறஞ்ஜன்(உபஅதிபர்)Eng.Trd.SLTS 2-I
3. திருமதி.ப.மகேந்திரன் Maths. Trd,B.A.Dip.in.Edu.(merit) SLTS - 1
4. செல்வி.மா.மகாலட்சுமி H.N.D.C. Dip.in.Edu SLTS 2-II
5. திரு.ச.தயானந்தன்Art.Trd.SLTS 2- I
6. திருமதி.ரா.பகீரதன் HomeScience.Trd.SLTS 2- I
7. திருமதி.ச.ஜெயசீலன் Primary Trd. SLTS 2- I
8. திருமதி.சி.கருணாநிதி Primary Trd. SLTS 3- I
9. திருமதி.சா.மயூரன்B.B.A.(Hons) SLTS 3 - I
10. திருமதி.ய.லிங்கேஸ்வரன் B.F.A. Music SLTS 3-I
11. திருமதி.வி.தயாபரன் B.F.A. Dance SLTS 3-I
12. திருமதி.சி.கமலநாயகிScience.Trd.SLTS 2 - I
13. திருமதி.பு.சர்வானந்தா B.A.(Hons) Dip.in.Edu, M.Phil SLTS - 1
14. திருமதி.ச.கிருபாகரன் Pri.Trd, S.L.T.S -2I
15. திருமதி.யா.நிர்மலானந்தன்Agriculture food & Tecno -Trd.SLTS 3-I
16. திருமதி கு.சண்முகநாதன் Primary Trd. SLTS 2- I

**கல்விசாரா ஊழியர்**

1. திரு.சி.கோகுலன் B.Com.

**தற்காலிக இணைப்பு ஆசிரியர்**

1. திருமதி.சு.கிருஸ்ணாNational Dip.in.Edu. S.L.T.S - 3I
2. திருமதி.பன்னீர்ச்செல்வி சந்திரரூபன் (B.A) S.L.T.S - 3I

**கல்வியியற் கல்லூரி முகிழ்நிலை ஆசிரியர்கள்**

1. செல்வி.ப.மங்களா
2. செல்வி.மு.ஹுஸைறா
3. செல்வி.இ.ஜனனி நிரோஷனி
4. செல்வி.த.கிரிசோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக்கீதம்

இராகம் :- ஹம்சத்வனி                    தாளம் :- ஆதி

பல்லவி

துதிபாடித் துதித்திடுவோம் - எங்கள்
தாவடி இந்துமா தேவியைப் போற்றியே....... !! துதி....

அனுபல்லவி

கதியெமக் கிங்கே காட்டும்
கல்விக் கலைநிதம் ஊட்டும்
கல்வித்தெய்வமாய் நாளும்
கவினுற விளங்கும் தாயை....துதி

சரணம்

நதியெனப் பாயும் நன்னெறிச் சீலமும்
முதியோர் மொழிந்த மூதுரை ஞானமும்
போதிய மலையோன் புகன்ற செந்தமிழும்
மதிநலமாய்ச் சேர்ந்திட வரமருளுந்தேவியை....!!துதி....


உயர்நீதி தன்னில் உயர்ந்தே போற்றும்
முயற்சியும் ஊக்கமும் மேலாந் துணிவும்
வியன்பெறு வாழ்வும் வளமா யீட்டிட
"உயர்நெறி வழியுய்மின்" என்றோதுந் தேவியை ....!!துதி....

பல்கலை கல்வியும் பல்தொழில் வளமும்
நல்வித்தை யாயிங்கு நல்லறிவில் நாளும்
நல்லா சிரியர் நேர்வழியில் நல்கவே
தொல்புகழ்(த்) தாவடி இந்துமா தேவியை ...!!துதி ....

பாடல் ஆக்கம் - அநு.வை.நாகராஜன் - அதிபர்
இசையமைப்பு - இணுவையூர் பிரம்மஸ்ரீ.ந.வீரமணிஐயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசளிப்பு விழா நிதி அன்பளிப்பு



## அமரர் தா.வேலாயுதபிள்ளை அவர்களின் ஞாபகார்த்தம்

தாவடியூர் அமரர் தா. வேலாயுதபிள்ளை அவர்களின் மகன் பொறியியலாளர் வே.கணேஸ்வரா (BSC, Phd, Eng கலிபோர்ணியா, ஐக்கிய அமெரிக்கா) அவர்களால் இப்பரிசளிப்பு விழாவிற்கான நிதி 75,000 ரூபா வழங்கப்படுகிறது. இவர் தாவடியூரின் புகழ்பூத்த கல்விமான்களுள் ஒருவராகக் காணப்படுவதுடன் கலைத்துறையில் பேரார்வம் கொண்ட வருமாவார். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அதிவிசேட சித்திபெற்று புலமைப் பரிசில் மூலம் ஐக்கிய அமெரிக்கா சென்றார். இவர் இப்பரிசளிப்பு விழா நிதியை ஆண்டு தோறும் எமது பாடசாலைக்கு வழங்குவதையிட்டு நாம் பேருவகை அடைவதுடன் இவரை மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நன்றியுடன் பாடசாலைச் சமூகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org